முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 128/2024

நாள். 26.03.2026 வா.சா.2 – திருமதி . சரஸ்வதி

க/பெ - திரு. நம்மையாழ்வார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1) நீங்கள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால்எனது கணவரின் சகோதரர் வாதிகள் வாரிசு என்று விளம்புகை செய்ய வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நாகமணியின் மனைவியின் பெயர் வாள் மணி என்றால் சரிதான். நாகமணி மற்றும் வாள்மணி தம்பதிகளுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் குழந்தைகள் இல்லை. குழந்தைகள் இல்லை என்பதற்கு எதாவது ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. அவர்கள் குடும்ப அட்டை உங்கள் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. நாகமணிக்கு எத்தனை சகோதரர்கள் என்றால் எனது கணவருடன் சேர்த்து 3 சகோதரர்கள் , 3 சகோதரிகள் ஆவார்கள்.

2) அவர்கள் பெயர்கள் சொல்ல முடியுமா என்றால் பாக்கியத்தாய், செல்லத்தாய், அன்னத்தாய் , மற்றும் பாக்கியமணி, எனது கணவர் நம்மையாழ்வார் ஆகும். என்ன தேவைக்காக உங்களுக்கு வாரிசு சான்றிதழ தேவைப்படுகிறது என்றால் சொத்து

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.03.26 18:38:01 +0530

நாகமணி பெயரில் இருந்து மாற்றம் செய்வதற்கு தேவைப்படுகிறது. சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்ன சொத்து என்றால் ஒரு சின்ன வீடு உள்ளது. அந்த வீட்டை யார் கிரையம் வாங்கினார்கள் என்றால் எனது மாமனார் அவருடைய மகனான நாகமணிக்கு கொடுத்தது ஆகும். உங்கள் மாமனார் பெயர் என்ன என்றால் பொன்னம்பலம் ஆகும்.

3) உங்கள் மாமனார் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. உங்கள் மாமனார் பொன்னம்பலத்திற்கு வாரிசு சான்றிதழ் எடுத்துள்ளீர்களா என்றால் ஆம் எடுத்துள்ளோம் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தள்ளீர்களா என்றால் இல்லை. வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் யார் யார் நாகமணியின் வாரிசு என்று முடிவு செய்ய முடியும் என்றால் சரிதான்.

4) அந்த வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். உங்கள் மாமனார் பொன்னம்பலத்தின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யாததால் வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.26 18:38:09 +0530